# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 002/ந/2017

ஆணை எண். 66/2018

நாள் : 26/03/2018

திரு எம். தமிழ்செல்வன்,
ஆவடி, சென்னை – 600 071. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
ஆவடி நகராட்சி,
ஆவடி. – எதிர் மனுதாரர்

சென்னை, ஆவடி, நந்தவன மேட்டூர், எண்.23, பாரதி தெரு முகவரியில் வசிக்கும் திரு M. தமிழ்செல்வன் அவர்களின் 21.12.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 26.12.2017 அன்று பெறப்பட்டு, 02/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, ஆவடி, நந்தவன மேட்டூர், எண்.23, பாரதி தெரு முகவரியில் வசிக்கும் திரு M. தமிழ்செல்வன் என்பவர், ஆவடி நகராட்சிக் குறித்து கீழ்க்காணும் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து நடவடிக்கை எடுக்கக் கோரி முறையிட்டுள்ளார் :-

(1) 2017–2018–ஆம் ஆண்டிற்கு குடிநீர் வழங்குவதற்கான ஒப்பந்தம் சட்டப்படியான வழிகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்படவில்லை ;

(2) அடிப்படை தகுதி கூட இல்லாத நபர்களுக்கு ஒப்பந்தம் வழங்கியது ;

(3) ஒப்பந்ததாரர்கள் நீர் நிரப்பும் நிலைகளிலிருந்து தண்ணீர் எடுத்து கடைகளுக்கு விநியோகம் செய்வது ;

(4) லாரிகளை கண்காணிக்க GPS கருவி பொருத்த தவறியது ;

(5) ஒப்பந்ததாரர்களுக்கு போலியான பில்கள் மூலம் நகராட்சியில் பணம் வழங்கியது ;

(6) ரூபாய் ஒரு கோடிக்கு மேல் மோசடி நடந்துள்ளது.

2. முறையீட்டு மனுதாரர் மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஆதார ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. தகுதியற்ற ஒப்பந்ததாரர்கள் என மனுதாரர் கருதும் நபர்களின் பெயர்களைக் குறிப்பிடவுமில்லை. மேலும், நீர்த்தேக்க நிலையிலிருந்து லாரிகள் மூலம் தண்ணீர் எடுத்து கடைகளுக்கு விநியோகம் செய்வது என்ற குற்றச்சாட்டிற்கும் கடைகளின் பெயர் மற்றும் லாரிகள் விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை. எனினும், முறையீட்டு மனுதாரரிடம் விசாரணை மேற்கொண்டாவது ஆதார ஆவணங்கள் மற்றும் பிற விவரங்கள் பெறலாம் எனக் கருதி 15.03.2018 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அன்றைய நாளில் விசாரணைக்கு வருகை தரவும் முறையீட்டு மனுதாரர் தவறியுள்ளார். முறையீட்டு மனுவில் மேற்படி குற்றச்சாட்டுகளுக்கு சாட்சிகளைக் குறிப்பிட்டு எந்தவொரு நபரின் பெயரும் தெரிவிக்கப்படவில்லை. எனவே, முறையீட்டு மனுதாரரின் 21.12.2017 நாளிட்ட முறையீட்டு மனு குறைபாடு உடையது எனக் கருதப்பட்டு, அதன் மீதான மேல்நடவடிக்கையை இத்துடன் முடித்துக் கொள்ள இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 26–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

3/4/18

செயலாளர்

2/4/18

3/4/18

பெறுநர்

1. திரு எம். தமிழ்செல்வன்,
எண். 23, பாரதி தெரு,
நந்தவன மேட்டூர்,
ஆவடி, சென்னை – 600 071.

2. நகராட்சி ஆணையர்,
ஆவடி நகராட்சி,
ஆவடி, சென்னை – 600 054.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்